Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நாகேஸ்வரஸ்வாமி திருக்கோயிலில் உள்ள படிமக்கலை ஓர் ஆய்வு

பா.இராமகிருஷ்ணன்,
M.F.A., M.PHIL., DA(ASTRO).,PHD..,
முனைவர்பட்டஆய்வாளர், சிற்பத் துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

84

**முன்னுரை:**

கோயில் நகரமான கும்பகோணத்தில் சோழர்காலம் முதல் எடுப்பிக்கப்பட்ட பல கட்டுமான கோயில்கள் காணப்படுகின்றன. முற்காலச் சோழர்கள் , இடைக்கால சோழர்கள் , பிற்காலச் சோழர்கள் மற்றும் விஜயநகர நாயக்கர் கலைப் பாணியை கொண்ட பல கோயில்கள் இங்கு காணப்படுகின்றன. இவற்றுள் வரலாற்று சிறப்பு வாய்ந்த கோவில்களில் கும்பகோணம் நாகேஸ்வர சுவாமி திருக்கோயில்குறிப்பிடத்தக்கதாகும். இக்கோயிலில் உள்ள சிறப்புமிக்க படிமக்கலையை மட்டும் எடுத்து கையாளுவதில்பெருமிதம் கொள்கிறேன்.

**1. மூலவர்**

கருவறையின்உள்மூலவராகநாகேஸ்வரர்உயரமானஆவுடையுடனும்மிகவும்சிறியபாணமும்அமைந்த மூலவர்.சூரியபகவான்வழிபட்டுப்பேறுபெற்றதாகவரலாறு. திரளானமக்கள்இவ்வழிபாட்டைக்கண்டுவணங்கி, போற்றிஅருள்பெறச்செல்கின்றனர். சிறப்பாகத்திங்கள், வியாழன்வழிபட்டதால்நாகதோஷம்முற்றிலும்நீங்கப்பெற்று, திருமணம்மற்றும்மகப்பேறுவிரைவில்சித்திக்கும்எனதலபுராணம்கூறுகிறது.

**2. பெரியநாயகிஅம்மன்**

தெற்குநோக்கியசன்னதியில்அம்மன்சமபாகஸ்தானகத்தில்நின்றநிலையில்உள்ளது. நான்குகரங்களும்கொண்டுவலதுகீழ்க்கரத்தில்அபயமுத்திரையும், மேற்கரத்தில்அக்ஷமாலையும், இடதுகீழ்க்கரத்தில்ஊருஹஸ்தமும், மேற்கரத்தில்பத்மமலரையும்தாங்கியுள்ளாள். தலையில்கரண்டமகுடமும், காதில்பத்ரகுண்டலமும், கழுத்தில்கண்டிகை, சரப்பளி, சவடி, அரும்புச்சரம்அணிந்தும், இருகொங்கைகளில்கச்சைஅணிந்தும், பூவில்அணிந்தும்தோள்களில்தோள்மாலையும், கைகளில்கேயுரமும்அணிந்துஉள்ளாள். இடுப்பில்கட்டியஆடையானதுகணுக்கால்வரையில்தொங்குமளவிற்குஉள்ளது. அழகியமுகத்துடன்அபயம்அளிப்பவளாகபத்ரபீடத்தின்மீதுநின்றநிலையில்அமைக்கப்பட்டுள்ளது.

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

**3.பிரம்மா**

மும்மூர்த்திகளின்முதல்வனாகவும்,நான்குமுகமும்கொண்டுபடைக்கும்கடவுளாகப்போற்றப்படும்பிரம்மன்தலையில்ஜடாமகுடமும்காதுகளில்பத்ரகுண்டலமும்நேரேபார்த்தமுகமும்கொண்டுள்ளார்கழுத்தில் அனைத்துஆபரணங்களையும்,ஆடைகளையும்அணிந்துநாற்கரங்களும்கொண்டுள்ளார்.

வலதுகீழ்கரத்தைஅபயமுத்திரையாகவும்,இடதுகீழ்கரத்தைஊருஹஸ்தமாகவும்வலதுமேற்கரத்தில்அக்ஷமாலையும், இடதுமேற்கரத்தில்கமண்டலமும்தாங்கிபத்மபீடத்தில்சமபங்கத்தில்நின்றுள்ளார். சிற்பநூல்கள்மானசாரம்பிரம்மாவைஉத்தமதசதாளத்தில்அமைக்கவேண்டும்என்றும்மேற்கரங்களில்அக்ஷமாலைகமண்டலத்திற்குமாறாகஸ்ருக்,ஸ்ருவம்அமைக்கலாம்எனகுறிப்பிடப்படுகிறது.[1]காசியபசில்பசாஸ்திரம்ஸ்ருக்என்பதுசிறியகரண்டிஎன்றும்ஸ்ரூவம்என்பதுபெரியகரண்டிஎன்றும்அதன்அளவுமுறைகளையும்குறிப்பிடுகின்றது.[2]பிரம்மாவைநீண்டதாடியுடன்அமைக்கவேண்டுமென்றுசில்பரத்தினம் குறிப்பிடுகின்றது.[3]இதுபோன்றதாடியுடனானபிரம்மாவைகங்கைகொண்டசோழபுரத்தில்காணலாம் தமிழகத்தில்பிரம்மாவிற்கென்றுதனியாககோயில்கள்இல்லைஎன்றாலும்தேவக்கோஷ்டங்களில் வழிபாடுசெய்யப்படுகின்றது.

1, மானாசாரம், அத்தியாயம், ப.5.

2, காசியபசில்பசாஸ்திரம், படலம் 2.

3,சில்பரத்தினம், ப.522.

**4.பைரவர்**

கோரமுகமும்,இருபெரியவிழித்தகண்களும்திறந்தவாயின்இருமருங்கிலும்இருகோரைப்பற்களும், தலையில்சடைமுடியும்,காதுகளில்பத்ரகுண்டலம்அணிந்தும்,தலையின்பின்புறம்தீச்சுடர்எரிவது போன்றும், எலும்புக்கூட்டினை மாலையாகவும், பாம்பினை இடுப்பில் சுற்றியவாறும் அப்பாம்புபடம்எடுத்துஆடுவதுபோன்றும்உள்ளதுஆபரணங்கள்அணிந்துஆடைஅணியாமல்நிர்வாணமாகசம்பங்கஸ்தானகத்தில்நின்றுள்ளார்.

நாற்கரங்களில்முறையேவலதுகீழ்க்கரத்தில்திரிசூலமும்,இடதுகீழ்கரத்தில்கபாலமும்,வலதுமேற்கரத்தில்உடுக்கையும்,இடதுமேற்கரத்தில்பாசமும்தாங்கியுள்ளார்.

சம்பங்கஸ்தானகத்தில்நின்றஇச்சிற்பத்தின்பின்புறம்அவரதுவாகனமானநாய் (பைரவர்) நின்றுள்ளது. இருகால்களின்இடைவெளிஒருஅடியுடன்நின்றநிலைசம்பாதஸ்தானமும்என்றுசிற்பநூல்கள்குறிப்பிடுகின்றன.[4]பத்மபீடத்தின்மீதுநின்றுள்ளஇச்சிற்பத்தின்பின்புறம்பிரபாவளிசுற்றிகாணப்படுகின்றது.

**5.கஜலெட்சுமி**

கருவறையின்மேற்குபக்கம்உள்ளதிருச்சுற்றில்இச்சிற்பம்காணப்படுகின்றது.

இருகால்களையும்மடக்குபத்மபீடத்தின்மீதுஅமர்ந்துநாற்கரங்களைக்கொண்டுசிரித்தமுகத்துடனும்தலையில்கரண்டமகுடம்அணிந்தும், அனைத்துஆடைஆபரணங்கள்அணிந்தும்காணப்படுகின்றது. வலதுகீழ்க்கரம்அபயமுத்திரையாகவும்,இடதுகீழ்க்கரத்தைவரதமுத்திரையாகவும்வலது,இடதுமேற்கரங்களில்தாமரைமலரைதாங்கியுள்ளாள்.கஜலெட்சுமியின்பின்பக்கம்இருயானையின்தலைமட்டும்தெரியுமளவிற்குஇருதுதிக்கையைதூக்கிலஷ்மியின்தலையின்பின்புறம்வைத்திருப்பதுபோல்காணப்படுகின்றது.சோழர்கலைப்பாணிக்கேஉரியவகையில்அழகியவடிவில்இச்சிற்பம்அமைந்துள்ளது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அஷ்டலட்சுமியில்ஒன்றாககருதப்படும்கஜலெட்சுமியின்அளவுமுறைபற்றியும்காசியபசில்பசாஸ்திரம், சில்பரத்தினம்போன்றநூல்கள்குறிப்பிடுகின்றன. கோயில்களில் கஜலெட்சுமிசிற்பம்வடமேற்குமூலையில்கிழக்குநோக்கிஅமைப்பதுமரபாகும்.

4. Abinaya Darbana, P.65.

**6.கங்காளர்**

கோயிலின்முதல்பிரகாரத்தில்தென்திசையில்வடக்குநோக்கிஇச்சிற்பம்அமைந்துள்ளது. சோழர்காலகோயில்களில்கங்காளமூர்த்திக்கென்றுவேறுஎங்கும்தனிச்சன்னதியாகஅமைக்கப்படவில்லைஎன்பதுசிறப்புடையதாகும்.

இச்சிற்பம்ஜடாமகுடத்துடனும்,நான்குகிரங்களுடனும்வலதுமேற்கரம்மானிற்குதர்பைகொடுப்பதுபோன்றும்இடதுமேற்கரம்மயில்பீலிகையால்ஆனசாமரத்தைவலதுபக்கம்நோக்கியவாறுகழுத்திற்குபின்புறமாகபிடித்துகாணப்படுகின்றது.

வலதுதன்கரம்உடுக்கையைஇசைப்பதுபோன்றும்இடதுகரத்தில்உடுக்கையைபிடித்தும்நடப்பதுபோன்றபாவனையில்நின்றநிலையில்உள்ளது.கழுத்தில்கண்டிகை,சரபளி,காதுகளில்மகரகுண்டலம்மற்றும்பித்ரகுண்டலமும்மார்புக்குகீழ்உதிரபந்தமும்இடையணிகள்மற்றும்மரவுரிஆடையுடன்அமைக்கப்பட்டுள்ளது.இடதுபக்கம்அருகில்விஷ்வக்ஷேணரும்.,தேவியின்சிற்பமும்இடம்பெற்றுள்ளது.

கங்களாரின்சிற்பம்சுமார்7அடிஉயரம்கொண்டதாகஅமைந்துள்ளது.

தமிழககோயில்களில்மிகப்பெரியகங்காளமூர்த்திசிற்பம்இதுதான்எனலாம்.

இதுபோன்றஅமைப்புடன்கூடியசோழர்காலசிற்பங்களைகாமரசிவல்லிகார்கோடிஸ்வரர்கோயில், திருக்கண்டியூர்போன்றஇடங்களில்தேவக்கோட்டங்களில்காணலாம்.

பிரம்மஹந்திதோஷத்தைபோக்குவதற்குசிவன்விஷ்ணுவைநாடிச்செல்கையில்வழியில்அனுமதிமறுத்தவிஷ்வரைக்ஷஷேணரைசூலத்தில்தாக்குவதுபோன்றும்பின்புஅருள்வழங்குவதாகவும்புராணகதைகள்கூறுகின்றன.சிற்பநூலானகாசியபசில்பசாஸ்திரம்இம்மூர்த்தியின்சிற்பத்தைமூலபேரமாகவும், உத்ஸவராகவும்அமைக்கலாம்எனகுறிப்பிடுகிறது.[5]மேற்குறிப்பிட்டபடிமவர்ணனையுடன்உத்திரகாமிகாசிமம்குறிப்பிடுகின்றது.மரவடிவபோதுகையுடனும்தண்டம்,எலும்புகூடுபோன்றவற்றைகைகளில்வைத்தவாறுஅமைக்கலாம்எனகூறுகின்றது.

**7.சண்டிகேஸ்வரர்**

கோயிலின்முதல்பிரகாரத்தில்வடதிசையில்தெற்குநோக்கியவாறுஇச்சன்னதிஅமைந்துள்ளது. மூலவரானசண்டிகேஸ்வரர்சிற்பம்சுமார்3அடிஉயரம்கொண்டதாகவும்,ஜடாமகுடத்துடன்இரண்டுகரங்களுடன்வலதுகால்மடக்கிஇடதுகால்தொங்கவிட்டநிலையில்பீடத்தின்மீதுஅமர்ந்தநிலையில்

5, காசியபசில்பசாஸ்திரம், ப.347, படலம் 75.காணப்படுகிறது. வலதுகரத்தில்பரசும், இடதுகரம்மடியில்வைத்தவாறுசுகாசனத்தில்காணப்படுகிறது.சண்டிகேஸ்வரருக்கென்றுதனிசன்னதியைமுதல்பிரகாரம்இரண்டாம்பிரகாரத்தில்அமைக்கவேண்டும்எனகாசியபசில்பசாஸ்திரம்குறிப்பிடுகிறது.[6]சண்டிகேஸ்வரரை,கைகூப்பியநிலையிலும்கையில்கோடாரியுடனும்அமைக்கவேண்டும்எனசில்பரத்தினம்குறிப்பிடுகிறது.[7]உத்திரகாமாகாகமத்தில்ஆறுவிதமாகசண்டிகேஸ்வரரைஅமைக்கலாம்என்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

றும்நான்குமுகங்களுடன்அமைக்கலாம்எனவும்கூறுகிறது.[8]இதுபோன்றசதுர்முகசண்டிகேஸ்வரரைதிருமெய்ச்சூர்கோயில்பிரகாரத்தில்காணலாம்.

### 8. மலர்பிடித்தபெண்சிற்பம்

மூலக்கருவறையின்தெற்குபாதச்சுவரில்சமபாதகஸ்தானகத்தில்பாதகணுக்கால்வரைமெல்லியஆடைகளுடன்இடையில்மேகலை,மணியாரஷதுடன்கைவளை,தோல்வளையுடன்நளினமானமென்சிற்பம்காணப்படுகின்றது.தாமரைசிகைமலர்வலதுகாலைபிடித்தும்அலங்காரங்களுக்குவடிவமைக்கப்பட்டுள்ளது.வலதுகாலைடோலஹஸ்தமாகவும்,இடதுகரம்தலையில்தம்மிலம்முக்கியத்துவம்அலங்காரத்துடன்கொடுக்கப்பட்டுமுகபாவணையும்இயற்கைத்தன்மையுடையபல்லவர்காலசிற்பக்கலைபாணியைஒத்துள்ளது.கழுத்தனிகளாககண்டிகை,சரப்பளி,சவடிபோன்றவைவரிசையாகவும்மிகப்பெரியகொங்கைகளுடன்அமைந்துள்ளது.அர்த்தமண்டபச்சுவற்றின்தென்புறத்தில்சுமார்5அடிஉயரத்தில்திரிபங்கத்தில்வலதுகாலைஊன்றிஇடதுகாலைகுஞ்சிதமாகஅமைந்துள்ளது.தொடைமீது(ஊரு)வைத்தவாறுஇடதுகரத்தில்மலர்பிடுத்தும்அழகுடன்அமைந்துஉள்ளது.காதுகளில்பத்ரகுண்டலம்கழுத்தில்கண்டிகை, சரப்பளிமற்றும்நுட்பமானவேலைபாடுடையஅணிகலன்ஆரமாகஅணிந்தும்கைவளை, தோல்வளைபோன்றஅணிகலனுடன்அமைந்துஉள்ளது. இடையில்மணிமேகலை, அக்கரபட்டிளை. தொங்குவஸ்திரம்மற்றும்கணுக்காலிற்குமேல்வரைஉடலோடுஒட்டியஆடையும்பாதங்களைபக்கவாட்டில்வைத்துகாணப்படுகின்றது.

கூந்தல்அலங்காரத்தில்சுருள்முடிபோன்றஅமைப்புகாட்டப்பட்டுள்ளது.

உடல்அமைப்புசிற்பநூல்அளவுகளுடன்அமைந்துள்ளது.

6, காசியசில்பசாஸ்திரம், படலம் 46, பக்.1-9.7,சில்பரத்தினம், ப.373.

8,உத்திரகாமாகாகமம், பக். 1041-51.

### 9. துறவிசிற்பங்கள்

அர்த்தமண்டபத்தின்தெற்குதிசையில்உள்ளதேவக்கோட்டத்தில்சுமார்5அடிஉயரத்தில்பௌத்ததுறவிபோன்றசிற்பம்அமைந்துள்ளது.புத்தருக்குரியஉடலமைப்பினையும்,உயர்ந்ததோள்களையும்,உடைய உடலமைப்புடனும்தோலாடை,இடையில்வஸ்திரம்மற்றும்கணுக்கால்வரைஆடையுடன் அமைந்துள்ளது.வலதுகரம்சிம்மகர்ணமுத்திரையும்இடதுகரத்தினைதொடையில்வைத்தவாறுஊருஹஸ்தத்துடன்அமைந்துள்ளது.உஷ்னிஷம்இல்லாதசுருள்முடிதலைஅமைப்பினையும்நீண்டகாதுகளையும்சாந்தமானமுகத்துடனும்அமைந்துள்ளது.பார்ப்பதற்குபௌத்தபிக்குபோன்றசாயலில் அமைந்துள்ளது.

அர்த்தமண்டபத்தின்தெற்குதிசையில்மற்றொருதுறவிசிற்பம்அமைந்துள்ளது.

தலையில்சுருள்முடியுடனும்வலதுகரம்அபயமாகவும்,இடதுகரம்ஊருஹஸ்தமாகவும், கீழாடைமரவுரிஆடைபோன்றும்இடைக்கட்டுஆடையுடனும்வலதுகாலைஊன்றிஇடதுகாலைபக்கவாட்டில்வைத்தவாறும்அமைந்துள்ளது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**10.அர்த்தநாரீஸ்வரர்**

கருவறையின்மேற்குதேவக்கோட்டத்தில்மிகரதோரணத்துடன்அர்த்தநாரீஸ்வரர்சிற்பம்இடம்பெற்றுள்ளது.இச்சிற்பம்வலதுபக்கம்சிவன்பாகமாகவும்இடதுபக்கம்உமைக்குரியபெண்பாகம்எனஇணைந்தஉருவமாகும்.வலதுபுறம்முறையேஜடாமகுடமும்மேற்கையில்மழுவும்,கீழ்கரம்வாகனமானரிஷபத்தின்தலையில்வைத்துள்ளவாருவலதுகையில்அகன்றும்பக்கவாட்டில்காணப்படுகின்றது.
இடதுபக்கம்இரண்டுமகுடமும்பெண்முகபாவத்துடனும்வலதுபுறம்மார்பும்இடதுபுறம்ஸ்தனமும்கரத்தில்மலர்பிடித்தவாறுஇடதுகாலைஊன்றிஅதிபங்கத்துடன்அமைந்துள்ளது.வலதுபுறம்புலித்தோலாடையும்,இடதுபுறம்கணுக்கால்வரைஆடையுடன்இடையணிகலன்கள்கழுத்தணிகளுடன்,
பின்புறம், ரிஷபவாகனம்நின்றநிலையில்பத்மபீடத்தின்மீதுநின்றவாறுஅமைந்துள்ளது.
சோழர்காலசிற்பகூறுபாடுகளுடன்அமைந்துள்ளஇச்சிற்பம்போன்றுபழையறைகோயிலிலும்காணலாம்அர்த்தநாரீஸ்வரர்பற்றிசிற்பநூல்கள்பலகருத்துகளைமுன்வைக்கின்றனசில்பரத்தினம்என்றநூல்நான்குகரங்களுடன்அமைக்கவேண்டும்எனகுறிப்பிடுகிறது.[9]அம்சுமத்பேதாகமம்அர்த்தநாரீஸ்வரரைஇரண்டுகரங்களுடன்அமைக்கலாம்எனகுறிப்பிடுகிறது.[10]

**11.சப்தமாதர்கள்**

தமிழகத்தில்சப்தமாதர்கள்வழிபாடுபல்லவர்காலம்முதல்பாண்டியர்கள்,சோழர்கள்போன்றோர்களாலும்பின்பற்றப்பட்டுவந்தன.சோழர்காலத்தில்தனிச்சன்னதிகளும்சப்தமாதர்களுக்கென்றுஅமைக்கப்பட்டன.இக்கோயில்இரண்டாம்திருச்சுற்றின்தென்மேற்குமூலையில்சப்தமாதர்களின்சிற்பங்கள்வரிசையாககாணப்படுகின்றன. இதில்பிரம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வராகி, வைஷ்ணவி, இந்திராணி, சாமுண்டிபோன்றசிற்பங்கள்சுமார்3அடிஉயரம்கொண்டதாகபீடத்தின்மீதுஅமர்ந்தநிலையில்காணப்படுகிறது.இச்சிற்பங்களுடன்சரஸ்வதியின்சிற்பங்களும்இடம்பெற்றுள்ளது.
கங்கைகொண்டசோழபுரத்தில்காணப்படும்சரஸ்வதிசிற்பம்போன்றுஇரண்டுகிரங்களுடன்இடதுகரம் ஓலைசுவடியுடனும், வலதுகரம்அக்ஷமாலையும், ஜடாமகுடத்துடன்பத்மாசனத்தில்அமைந்துள்ளது. சப்தமாதர்கள்அமைக்கும்முறையினையும், அளவுமுறைகளையும்சிற்பங்கள்குறிப்பிடுகின்றன. குறிப்பாகசாமுண்டியைமேல்நோக்கியகூற்றில்புலித்தோலாடையுடன்ஆலமரத்தடியில்வீற்றிருப்பவனாகிஅமைக்கவேண்டும்எனகூறுகின்றன.[11]

**12.சூரியன்**

முதல்திருச்சுற்றின்வடக்குபக்கம்நோக்கியவாறுசூரியன்சன்னதிஅமைந்துள்ளது.
இதில்மூலவரானசூரியன்நான்குகரத்துடன்,மேற்கரம்தாமரையும்,கீழ்கரங்கள்அபயவரத்துடன்அமைந்துள்ளது.இதுபோன்றஅம்சத்துடன்கருவறைதேவக்கோட்டங்களில்அமைந்துள்ளசூரியனின்சிற்பங்களும்அமைந்துள்ளது.மூலவரின்சிற்பங்கள்போன்றஅதன்தேவக்கோட்டத்திலும்சிற்பங்கள் அமைக்கும்முறைதுணைசன்னதிகளில்பின்பற்றப்படுவதுமரபாகும்.
அருகன்எனஅழைக்கப்படும்சூரியன்சாந்தமானவடிவமும்நான்குகரங்களுடன்அமைக்கவேண்டும்எனநூல்கள்கூறுகின்றன.[12]

9, சில்பரத்தினம், படலம் 22, ப.36.

10,அம்சுமத்பேதாகமம், படலம் 67.

11, காசியபசில்பசாஸ்திரம், படலம் 46,பக். 17-21.

12, காசியபசில்பசாஸ்திரம், பக். 51.

**முடிவுரை:**

முற்கால சோழர் கோயில்களில் மிகவும் சிறப்பு மிக்க படிமகலையானது , இந்த நாகேஸ்வர திருக்கோவிலில் இருப்பது இந்த ஆய்வின் மூலம் நான் எடுத்துரைக்கின்றேன். மேலும் , இதுவரை நான் கண்டிராத வகையில் பிரமிக்க வைக்கும் சிற்பங்கள் இங்கு வடிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் உள்ள படிமகலையை எடுத்து கையாண்டதில் மிகவும் பெருமிதம் கொள்கின்றேன்.

**துணைநூற்பட்டியல்**

இராசமாணிக்கனார், மா **சோழர்வரலாறு,** பூரம்பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1985.

.

கோபாலன், எஸ்., **காசியப்பசில்பசாஸ்திரம்,** (தமிழ்மொழிபெயர்ப்பு). சரசுவதிமகால்நூலகம், தஞ்சாவூர், 1960.

சுப்ரமணியசாஸ்திரிகள், கே.எஸ்., **மயமதம் I&II,** சரசுவதிமகால்நூலகம், தஞ்சாவூர், 2004.

சுப்பிரமணியசாஸ்திரி, **காசியபசில்பசாஸ்திரம்,** சரசுவதிமகால்நூலகம், தஞ்சாவூர்.

பாலசுப்பிரமணியன், குடவாயில் **தஞ்சைபெரியகோயில்,** அஞ்சனாபதிப்பகம், தஞ்சாவூர், 1995.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பாலசுப்பிரமணியன், எஸ்.ஆர்., **சோழர்கலைப்பாணி**
முற்காலச்சோழர்
கலையும்சிற்பமும்,
பாரி நிலையம், சென்னை,
1966.

மங்களமுருகேசன்,ந.க. , **சோழர்வரலாறு,**
முல்லை நிலையம்,
சென்னை,
1998.

மானாசாரம், **சரசுவதிமகால்நூலகம்,**
தஞ்சாவூர்.

சில்பரத்தினம் , **சரசுவதிமகால்நூலகம்**
தஞ்சாவூர்.

அம்சுமத்பேதாகமம் , **சரசுவதிமகால்நூலகம்,**
தஞ்சாவூர்.

விமானார்ச்சனகல்பம், **சரசுவதிமகால்நூலகம்,**
தஞ்சாவூர்.

விஸ்வநாதசிவாச்சாரியார், **உத்திரகாமாக்காகமம்,**
இந்து அறநிலையத்துறை,
சென்னை,
1999.

வேங்கடசாமி, மயிலைசீனி. **கலைக்களஞ்சியம்,தொகுதி-5,**
தமிழ்வளர்ச்சித்துறை,
சென்னை,
1959.

**ஆங்கிலநூல்கள்**

**A.** Epigraphy,. **Annual Report on Epigraphy,**
1928-29,
Delhi.

Brown,Percy **Indian Architecture,**
D.B.Taraporevala Sons,
Bombay,
1987

Gopinatha Rao, T.A.,. **Elements of Hindu Iconography,**
Motilal Banarsidass,
Delhi,
1985.

Jeyapriya Rajarajan,. **A Note on Vaccirakkottam,**
**East and West,** Vol.54,
1.4.2004.

Jouveau Dupreuil., **Dravidian Architecture,**
Asian Educational Services,
New Delhi,
1987.

Kalidas R., **History and Culture of the Tamils**,
Vijay Publications,
Dindigul,
1976.

Kalidas R., **Ellora Sculptures and Architecture**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

Srinivasan, K.R.,. **Cave Temples of thePallavas.**
. **Dharmaraja Radha Sculpture and Architecture of Mahabalipuram**, Abhinav Publications, New Delhi, 1975.

Michel w meister., **Encyclopedia of Temple Architecture,**

Harle J.C., **Temple Gateways of South India,**

Mahalingam, T.V.,. **A Topographical List of Inscriptions in the Tamil Nadu and Kerala States.**